## ஏக்கருக்கு 50 டன்…’சக்கைப் போடு போடும் சவுக்கு!’

வணிகரீதியில், குறுகிய காலத்தில் பலன் தரும் மரங்களில் முக்கியமானது… சவுக்கு. ஒரு காலத்தில் கடற்கரைப் பகுதிகள், அதிக மணற்பாங்கானப் பகுதிகள், தரிசு நிலங்கள் போன்ற இடங்களில் மட்டுமே தான் சவுக்கு சாகுபடி நடைபெற்று வந்தது. ஆனால்… நெல், கரும்பு, வாழை போன்றவற்றிற்கான இடுபொருட்களின் விலையேற்றம்,



ஆள்பற்றாக்குறை, தண்ணீர்த் தட்டப்பாடு போன்ற காரணங்களால், அனைத்துப் பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்புகளிலும் சவுக்கு இடம் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. பொதுவாக மரப்பயிர்கள் என்றாலே, அவற்றின் அறுவடைக்காக ஆண்டுக் கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால், சவுக்கு அதிகபட்சமாக ஐந்து ஆண்டுகளிலேயே பலன் தந்துவிடும். இறவை சாகுபடி என்றால் மூன்றரை ஆண்டுகளுக்குள்ளும், மானாவாரி என்றால் 5 ஆண்டுகளுக்குள்ளும் அறுவடை செய்யலாம்.

கட்டட வேலை மற்றும் எரிபொருள் என்று மட்டுமே பயன்பட்ட வந்த சவுக்கு, தற்போது காகிதக் கூழ் தயாரிப்பில் மிக முக்கியமாக பயன்படுகிறது. அதனால், அதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இதில் பல ரகங்கள் இருந்தாலும், வணிக ரீதியில் அதிக பயன்தரக்கூடியது ஜுங்குனியானா ரக சவுக்கு. சாதாரண சவுக்கு மரங்களைவிட, வேகமாக வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. இந்த மரம் சுமார் 15 முதல் 25 மீட்டர் உயரம் வரையிலும், குறுக்கு வட்டம் 30 முதல் 50 செ.மீ வரையிலும் வளரும்.

ஜுங்குனியானா ரகத்தை வணிகரீதியாக கீழ்வருமாறு சாகுபடி செய்யலாம்.

மணல், வண்டல்மண், செம்மண் ஆகிய நிலங்களில் நன்றாக வளரக்கூடியது சவுக்கு. கடினமண், களிமண் மற்றும் வடிகால் வசதியில்லாத நிலங்களில் மரத்தின் வளர்ச்சி குறைவாக இருக்கும். கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரம் வரையிலான இடங்களிலும் 15 மிகிரி முதல் 33 மிகிரி வரையிலான செல்சியஸ் வெப்ப நிலையிலும்

வளரக்கூடியது. உழவு செய்த நிலத்தில் கன்றுகளை 4 அடிக்கு 4 அடி இடைவெளியில் நடவேண்டும். ஏக்கருக்கு 4 ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். ஒரு அடி நிள, அகல, ஆழமுள்ள குழிகளை எடுத்து, அதில் தொழுவுரம் மற்றும் மண்புழு உரங்களை இட்டு நட்டால் செடியின் வளர்ச்சி நன்றாக இருக்கும்.

ஒரு மாத காலம் வரை 3 அல்லது 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். செடி தழைத்த பிறகு, வாரம் ஒரு முறை பாய்ச்சலாம். ஆறு மாதத்துக்குப் பிறகு, 15 நாட்களுக்கு ஒரு முறையும் ஒராண்டிற்குப் பிறகு தேவைக்கு ஏற்பவும் பாசனம் செய்தால் போதும். நன்கு வளராத கன்றுகளை, முதல் இரண்டு மாதத்திற்குள் நீக்கிவிட்டு, புதிய நாற்றுகளை நட வேண்டும்.

முதல் ஆண்டு மட்டும் களை எடுக்க வேண்டும். அதன் பிறகு மரத்திலிருந்து விழும் இலை நிலத்துக்கு மூடாக்கு போல் ஆகிவிடும். இதனால் களைகள் கட்டுப்படுவதுடன், நீர் ஆவியாவதும் குறையும் வாய்ப்புள்ள விவசாயிகள் சவுக்கு மரங்களுக்கு இடையில் காய்கறிகளை சாகுபடி செய்யலாம்.

ஓராண்டின் முடிவில், மரத்தின் உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு உயரம் வரை உள்ள கிளைகளை கவாத்து செய்துவிடவேண்டும். இம்மரத்தின் வேர்களிலுள்ள 'ஃபிரங்கியா' வகை பாக்டீரியாக்கள் காற்றிலுள்ள நைட்ரஜனை, நைட்ரேட் சத்துக்களாக மாற்றி, நிலத்தில் சேமிப்பதால் மண்வளமாகிறது.

சவுக்கு மரத்தை 3 முதல் 5 ஆண்டுகளில் தேவைக்கேற்ப வெட்டலாம். நான்கு ஆண்டுகளில் ஒரு ஏக்கரில் இருந்து 40 முதல் 60 டன்கள் சரை கிடைக்கும். இதன் மூலம் 50 ஆயிரம் முதல் 80 ஆயிரம் ரூபாய் சரை லாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. அதற்கு மேலும் கிடைக்கலாம். சவுக்கு மரம் வெட்டப்பட்ட பின் மறுபடியும் துளிர்க்கும். அதனால் மறுதாம்பு மூலமாகவும் லாபம் பெறலாம்.

**தொடர்புக்கு :**

தனபதி

94435-93339

---

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.3.11